**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 103/2023**

2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய மணிகண்டன் **PW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 16.02.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிகண்டன் | | |
| Father /Husband Name | : சீனிவாசன் | Court | : |
| Village | : காளகஸ்திநாதபுரம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 42/2026 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | 08.04.2022 | வாதி பெயரில் ஏற்பட்ட கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | -- | தாவா சொத்திற்கான பட்டாவின் கணினி நகல் (எண்ணிக்கை-3) **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | 03.10.2023 | 01.01.2020 முதல் 02.10.2023 வரை உள்ள காலத்திற்கான தாவா சொத்திற்கான வில்லங்க சான்றின் கணினி நகல் **வாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | 03.10.2023 | 01.01.2022 முதல் 02.10.2023 வரை உள்ள காலத்திற்கான தாவா சொத்திற்கான வில்லங்க சான்றின் கணினி நகல் **வாசாஆ 4** ஆக |

| | | |
|---|---|---|
| | | குறியீடு செய்யப்படுகிறது. |

**தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**